அரசு ஊழியர்களுக்கும், ஆலை ஊழியர்களுக்கும் கதர், கைத்தறி கடன் கொடுப்பது போல் 6 மாதம் அல்லது 1 வருடத்திற்கு வேண்டிய அரிசியைக் கடனாகக் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். அவர்களால் சேமித்து வைத்துக்கொள்ள ஏதுவாகும்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எந்தத் தொடர்பும் இல்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் நாட்டுப் படகு மீனவர்களுக்கும் விசைப்படகு மீனவர்களுக்கும் இடையில் நிலவும் பதட்டநிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் யா. சை. மு. யூசுப், இரா. அமிர்தராஜ் ஆகியோர் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, ''திருநெல்வேலி மாவட்டம், பெரிய தாழை கிராமத்தில் கட்டுமரத்தால் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் இடையில் நிலவும் பதட்ட நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, அவை முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

13–10–1979 அன்று தூத்துக்குடி விசைப் படகு மீனவர்கள் 12 கட்டுமரங்களுடன் பெரிய தாழையைச் சேர்ந்த 44 மீனவர்களைப் பிடித்துக் கொண்டு வந்து தாங்கள் மீன் பிடிக்கும்போது கட்டுமர மீனவர்கள் தொல்லை கொடுத்தார்கள் என்று காவல் துறையினரிடம் புகார் கொடுத்தார்கள். பிறகு எல்லா கட்டுமர மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். இதுபற்றிய வழக்கொன்று தூத்துக்குடி தெற்கு சரகம் காவல் நிலையத்தின் ஆய்விலிருந்து பிறகு திருச்செந்தூர் காவல் நிலையத்திற்கு மாற்றலாகியிக்கிறது.

1979 நவம்பர் 10] (திரு. க. உரொ. எட்மண்ட்)

இதற்கிடையில் கட்டுமர மீனவர்கள் மற்றும் விசைப் படகு உரிமையாளர்களின் பிரதிநிதிகள் திருநெல்வேலி சென்று மாவட்ட காவல் துறைத் துணைத் தலைவரைச் சந்தித்து தங்களுக்குள் இருக்கும் தகராறைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர். இயந்திரப் படகுகளுக்கு தீ வைத்துவிடுவதாகப் பயமுறுத்தும் நாட்டுப் படகாளர்களைப்பற்றியும் அவரிடம் இயந்திரப் படகாளர்களால் புகார் செய்யப்பட்டது. விசைப்படகாளர்களால் கைப்பற்றப்பட்ட நாட்டுப் படகுகள் இன்னும் அவர்கள் வசமே இருக்கின்றன. இவற்றைக் கைப்பற்றவும், மீன் துறை முகத்திலிருந்து நாட்டுக் கலன்களை அகற்றவும், காவல் துறை அதிகாரிகளை தூத்துக்குடி மீன்துறை உதவி இயக்குனர் கேட்டுள்ளார். மீனளத்துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் மேற்கொண்டு மோதல்கள் ஏற்படாத வண்ணம் முனைப்பாக கண்காணிப்பு செய்து வருகிறார்கள்.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தரவு போட்டு ஒரு மாதமாகியும் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. கைப்பற்றப்பட்ட நாட்டுப்படகுகளை விசைப்படகுக்காரர்கள் அவர்களிடத்திலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விசைப்படகுக்காரர்கள் ஆயுதத்துடன் பயணம் செய்கின்ற காரணத்தால் நாட்டுப் படகுக்காரர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத அச்சம் அங்கே இருக்கிறது.

இரால் மீன் பிடிப்பதில்தான் இந்தப் போட்டி இருக்கிறது. எனவே இரால் மீன் சீசனில் நாட்டுப்படகுக்காரர்கள் மீன் பிடிக்கச் செல்கின்றபோது அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ? சரியான பெட்ரோல் போட்டு அரசு உதவ உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இரண்டு தரப்பிலேயும் அழைத்து வைத்து இதைப் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்த ஓரளவிற்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டுள்ளது. விசைப்படகுக்காரர்களால் கைப்பற்றப்பட்ட நாட்டுப் படகுகள் இன்னும் திருப்பித் தரப்படவில்லை. காவல் துறையிலே வழக்கு போடப்பட்டிருப்பதால், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அவைகளை மீட்டு நாட்டுப்படகு சொந்தக்காரர்களுக்கு திரும்பக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப் படகு, விசைப்படகு உபயோகிப்பவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே தொழிலைச் செய்பவர்கள். அரசு எத்தனை ஆணைகளைப் பிறப்பித்தாலும், அதை மீறுப

வர்கள் விசைப்படகுக்காரர்கள். தங்களுடைய சொந்த லாபத்திற்காக அவர்கள் இப்படி அரசாணைக்கு புறம்பாகப் பொய்ப் புகார்களை நாட்டு படகுக்கு எதிராக காவல் துறையிடம் கொடுக்கிறார்கள் ஆதலால் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட விசைப்படகுகளை அரசு தேசிய உடைமையாக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்னையைத் தீர்ப்பதற்குத்தான் அரசு அண்மையில் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது அந்த உத்தரவின் மீது விசைப்படகு சொந்தக்காரர்கள் உயர் நீதி மன்றத்தில் ரிட்மனு போட்டு, அந்த அரசு உத்தரவுக்கு தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். விசைப்படகுகளை தேசியமயமாக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்னை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(8) அரசு தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் பெரியார் படம் வைப்பது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, ''தந்தை பெரியார் திருவுருவப் படம் அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் வைப்பதில் ஏற்படும் காலதாமதத்தினால் அங்கு பணியாற்றும் ஊழியர்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து'' 'அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறப்பதற்கு ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. மேலும் தேர்வு இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டிடம் கட்டிக் கொண்டு இருப்பதால், அப்புதிய கட்டிடத்தில் இயக்குநரும், மற்ற அதிகாரிகளும் அங்கு அமர்த்தப்பட இருப்பதாலும் அப்புதிய கட்டிடத் திறப்பு விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர், கல்வியமைச்சர் ஆகியோரின் முன்னிலையில் தந்தை பெரியார் போன்ற தலைவர்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைப்பது நல்லது என்று கருதப்பட்டது.